**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**OS.No.43/2020 – PW-1**

| | |
|---|---|
| Name | திரு.சஞ்சீவ் குமார் |
| Father Name | திரு.சந்திரசேகரன் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 10.11.2025.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

என்னுடைய வழக்குரையில் 4-ம் பத்தியில் முதலாம் பிரதிவாதி நிறுவனத்திற்கு ரூ.73,15,020/- கடன் பாக்கித் தொகை உள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். 2-ம் பிரதிவாதிக்கு நான் எழுதிக்கொடுத்துள்ள பொது அதிகார ஆவணத்தை என்னுடைய சொத்துகள் அனைத்தையும் பொறுத்து எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 2-ம் பிரதிவாதிக்கு எந்த தேதியில் பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என ஞாபகமில்லை. வழக்கு சொத்து விவரமும், பொது அதிகார ஆவணத்திலுள்ள சொத்து விவரமும் மாறுபடுகிறதா அல்லது ஒரே சொத்தா என்றால் ஒரே சொத்து தான். ஆனால் பொது அதிகார பத்திரம் காலி மனைக்காக கொடுக்கப்பட்டது. பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்ட 21.04.2013 தேதியில் அந்த பொது அதிகார ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் கட்டிடம் இருந்தது. அந்த பொது அதிகார பத்திரத்தில் சொத்து விவரத்தில் மனை எண்.27 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பொது அதிகார பத்திரத்தில் பொதுவாக மொத்த விஸ்தீரணம் 3405 ச.அடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், அதில் கட்டிடத்தின் விஸ்தீரணம் என தனியாக குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். காலி மனையின் விஸ்தீரணம் மட்டுமே போடப்பட்டுள்ளது. பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்ட போதே அந்த இடத்தில் கட்டிடம் உள்ளதை மறைத்து வேண்டுமென்றே காலியிடத்தை மட்டும் குறிப்பிட்டு 1 முதல் 4 பிரதிவாதிகளை ஏமாற்று வேண்டுமென்பதற்காக அந்த பொது அதிகார பத்திரத்தை எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த பொது அதிகார பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று ஆவணங்கள் பதிவாளரிடம் புகார் கொடுத்துள்ளேன். எந்த அதிகாரியிடம் முதலில் புகார் கொடுத்தேன் என தற்போது ஞாபகமில்லை. சென்னை பதிவுத்துறை தலைவரிடமும், அரக்கோணத்திலுள்ள பதிவாளரிடமும் புகார் கொடுத்தேன். சென்னையில் பதிவுத்துறை தலைவரிடம் நான் கொடுத்த புகாரின் பேரில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் நான் அரக்கோணம் மாவட்ட பதிவாளருக்கு அனுப்பிய

புகாருக்கு அவர் 26.12.2017–ல் எனக்கு அனுப்பிய பதிலில் பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்ய இயலாது என கூறியுள்ளதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அரக்கோணம் மாவட்ட பதிவாளரின் உத்தரவை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யவில்லை. 2–ம் பிரதிவாதிக்கு நான் எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தை வைத்து தான் 2–ம் பிரதிவாதி, 4–ம் பிரதிவாதிக்கு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 4–ம் பிரதிவாதி பெயருக்கு கிரையப்பத்திரம் பதிவு செய்த பிறகு என்னை சொத்தை காலி செய்து கொடுக்க கேட்டு 4–ம் பிரதிவாதி எனக்கு 30.06.2018–ம் தேதியிட்ட பதிவு தபாலில் ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தை இது நாள் வரை சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்து வருகிறேன் என்றாலும், என்னுடைய வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. என்னுடைய சட்ட விரோத ஆக்கிரமிப்பின் பேரில் சட்ட நடவடிக்கைகளிலிருந்து தப்பிப்பதற்காக நான் 1 முதல் 4 பிரதிவாதிகள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2–ம் பிரதிவாதிக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்த பிறகு அதை ரத்து செய்யுமாறு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை. வாய்மொழியாக கேட்டேன். நான் வாய்மொழியாக பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்ய கேட்கவில்லை என்றாலும், 4–ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த பிறகு தான் நான் பிரச்சனை செய்ய ஆரம்பித்தேன் என்றாலும் சரியல்ல. 2011–ம் ஆண்டு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்ய 2020–ம் ஆண்டு ரத்து செய்ய வழக்கு தாக்கல் செய்திருப்பது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பொது அதிகார பத்திரம் என்னுடைய முழு சுயநினைவோடு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். காலிமனைக்கு எழுதிக்கொடுத்தேன். வா.சா.ஆ.7 கிரையப்பத்திரம் 2–ம் பிரதிவாதியால் என்னுடைய பொது அதிகார முகவர் என்ற முறையில் 4–ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரிவிக்காமல் அந்த ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணம் எழுதிக்கொடுப்பது சம்மந்தமாக 2–ம் பிரதிவாதி எனக்கு தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 கிரையப்பத்திரம் சென்னையில் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஏற்கனவே என் மீது 1 முதல் 4 பிரதிவாதிகள் சென்னை மாஸ்டர் நீதிமன்றத்தில் CS.No.443/2018 வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். அந்த வழக்கில் என் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரானார். ஒருதலைப்பட்ச தீர்ப்பானது. அந்த வழக்கு ஒருதலைப்பட்ச தீர்ப்பானதாக என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் 2–ம் பிரதிவாதி ரூ.3,54,07,347/– என்னிடம் கேட்டு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த தீர்ப்பின் பேரில் மேல்முறையீடு தாக்கல் செய்து நிலுவையிலுள்ளது. நான் சொல்வது போல் மேல்முறையீடு எதுவும் நிலுவையில் இல்லை என்றால் சரியல்ல. மேல்முறையீடு தாக்கல் செய்திருப்பதாக என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை

என்றால் சரிதான். வழக்கு சொத்திலுள்ள கட்டிடங்களுக்கும் சேர்த்து தான் பொது அதிகார பத்திரம் நான் எழுதிக்கொடுத்ததாக ஒரு கூடுதல் பிரமாண பத்திரம் 2–ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 22.03.2012–ம் தேதியில் நான் 2–ம் பிரதிவாதிக்கு கொடுக்க வேண்டிய கடன் தொகையை திரும்ப செலுத்திவிடுவதாக கூறி ஒரு தபால் அனுப்பியிருக்கிறேன் என்றால் கடனை திரும்ப செலுத்திவிடுவதாக தபாலிலோ அல்லது மின்னஞ்சலிலோ அனுப்பியிருக்கிறேன். தேதி ஞாபகமில்லை. 10 நாட்களுக்குள் கடனை திருப்பி செலுத்திவிடுவதாக 03.10.2017–ம் தேதி மின்னஞ்சல் அனுப்பியிருக்கிறேன் என்றால் ஞாபகமில்லை. 2–ம் பிரதிவாதிக்கு 31.05.2018 வரை நான் ரூ.3,54,07,347/– செலுத்த வேண்டியது உள்ளது என்றால் சரியல்ல. 2–ம் பிரதிவாதி என்னிடம் வெற்று பச்சைத்தாள்களில் கையெழுத்து வாங்கியதாக நான் வழக்குரையில் சொல்லியிருப்பது சம்மந்தமாக வேலூரிலுள்ள நில அபகரிப்பு தடுப்பு பிரிவு போலிசாரிடம் புகார் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.11 புகார் மனு நகலில் நான் வெற்றுத்தாள்களில் கையெழுத்து போட்டுக்கொடுத்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய வழக்குரையில் ரூ.18,45,000/– திரும்ப செலுத்திவிட்டதாக சொல்லியிருப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

(1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.